## ராஃபா எல்லையை திறந்தது எகிப்து: வெளிநாட்டவர்களுக்கு மட்டும் அனுமதி

**ராஃபா:** காசா மீதான இஸ்ரேலின் தாக்குதல் மூன்று வாரங்களுக்கு மேலாக நீடித்து வருகிறது.

இந்தச் சூழலில், ராஃபா எல்லையை எகிப்து நேற்று திறந்தது. காசாவிலிருந்து ராஃபா வழியே எகிப்துக்குள் வருவதற்கு வெளிநாட்டவர்களுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதேபோல், போரில் தீவிர காயமடைந்த 81 பாலஸ்தீனர் களுக்கும் அனுமதி வழங்கப்பட் டுள்ளதாக காசா எல்லை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். எகிப்துக்கும் பாலஸ்தீனத்தின் காசாவுக்கும் எல்லைப் பகுதியாக ராஃபா அமைந்துள்ளது.

போரிலிருந்து தப்பிப்பதற்காக மக்கள் காசாவிலிருந்து வெளியேறி எகிப்துக்குள் நுழைய திட்டமிட்ட நிலையில், எகிப்து அரசு ராஃபா எல்லையை மூடியது. அதன் பிறகு, ராஃபா எல்லை வழியாக காசாவுக்குள் அத்தியாவசிய பொருட்களைக் கொண்டு செல்வ தற்கு மட்டும் எகிப்து அனுமதி வழங்கியது. காசாவிலிருந்து மக்கள் எகிப்துக்குள் நுழைய அனுமதி மறுத்தது.

காசாவில் 24 லட்சம் மக்கள் வசித்து வருகிறனர். இவர்களில் 44 நாடுகளைச் சேர்ந்த மக்களும் அடக்கம். ஐநா உட்பட 28 சர்வதேச அமைப்புகள் காசாவில் உள்ளன.

இந்நிலையில், அமெரிக்கா மற்றும் கத்தார் ஆகிய இரு நாடுகள் பேச்சுவார்த்தை மேற்கொண்டதையடுத்து, மக்கள்

வெளியேறுவதற்காக தற்காலிகமாக ராஃபா எல்லையை எகிப்து திறந்துள்ளது.

காசாவில் உள்ள வெளிநாட் டவர்களுக்கும் இரட்டை குடியு ரிமை பெற்றவர்களுக்கு மட்டுமே ராஃபா எல்லை வழியாக எகிப்துக் குள் வருவதற்கு அனுமதி வழங்கப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட் டுள்ளது. மேலும், போரில் காய மடைந்த 81 பாலஸ்தீனர்களை சிகிச்சைக்காக எகிப்துக்குள் அழைத்து வருவதற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. போரால் காய முற்றவர்கள் மற்றும் உடல்நலம் குன்றியவர்களை அழைத்துச் செல்ல எகிப்து எல்லையில் ஆம்பு லன்ஸ்கள் நிறுத்தப்பட்டுள்ளன.

## சாலைகளின் நிலை குறித்து புகாரளிக்க 'நம்ம சாலை' செயலி: அமைச்சர் உதயநிதி அறிமுகம் செய்தார்




நம்ம சாலை என்ற புதிய செயலியை நெடுஞ்சாலைகள் துறை அமைச்சர் எ.வ.வேலு முன்னிலையில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி தொடங்கி வைத்தார். நிகழ்ச்சியில்

நெடுஞ்சாலைகள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப்யாதவ், தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்ட இயக்குநர் எஸ்.பிரபாகர், நெடுஞ்சாலைத் துறை கட்டுமானம் மற்றும் பராமரிப்பு தலைமைப் பொறியாளர் இரா.சந்திரசே கர், முதன்மை இயக்குநர் ந.சாந்தி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**சென்னை:** தமிழகத்தில் `பள்ளங்களற்ற சாலை'என்ற இலக்கை அடையும் வகையில், சாலையில் ஏற்படும் பள்ளங்களை குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் சரி செய்ய வேண்டும் என்பதால், 2023-24-ம் ஆண்டு மானியக்கோரிக்கையின்போது பிரத்யேகசெல்போன் செயலி உருவாக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. இதன்அடிப்படையில் `நம்ம சாலை' என்றமென்பொருள் மற்றும் செல்போன் செயலி உருவாக்கப்பட்டுள்ளது.

இந்தச் செயலியை அறிமுகம் செய்யும் நிகழ்ச்சி, சென்னை, கிண்டி, நெடுஞ்சாலை ஆராய்ச்சிநிலையத்தில், நெடுஞ்சாலைகள் துறை அமைச்சர் எ.வ.வேலு தலைமையில் நேற்று நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்ற விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின்மக்கள் பயன்பாட்டுக்காக செயலியை அறிமுகம் செய்தார்.

தொடர்ந்து, தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களில் ஆசியவளர்ச்சி வங்கி நிதியுதவியுடன்இரு வழித்தடமாக அகலப்படுத்திமேம்படுத்தப்பட்ட சாலைகளான ரூ.204.70 கோடி மதிப்பீட்டில் மேலூர் –திருப்பத்தூர் சாலை, ரூ.198.65 கோடிமதிப்பீட்டில் தஞ்சாவூர் - மன்னார்குடி சாலை, ரூ.219.47 கோடி மதிப்பீட்டில் விருத்தாசலம் – உளுந்தூர்பேட்டை சாலை ஆகிய சாலைகளையும் அமைச்சர் உதயநிதி மக்கள் பயன்பாட்டுக்கு தொடங்கி வைத்தார்.

மேலும், நெடுஞ்சாலைத்துறை கட்டுமானம் மற்றும் பராமரிப்பு அலகில் உள்ள 45 கோட்ட பொறியாளர்கள், 192 உதவி கோட்ட பொறியாளர்கள் மற்றும் 274 உதவி பொறியாளர்களுக்கு சியுஜி எண் வழங்கப்பட்டது.

நிகழ்ச்சியில், துறையின் செயலர் பிரதீப் யாதவ், தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்ட இயக்குநர் எஸ்.பிரபாகர், நெடுஞ்சாலை கட்டுமானம் மற்றும் பராமரிப்பு தலைமைப் பொறியாளர் இரா.சந்திரசேகர், தமிழ்நாடு நெடுஞ்சாலைதுறை பொறியாளர் சங்க நிர்வாகிகள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**செயலியின் செயல்பாடு:** நம்ம சாலை செயலி மூலம், நெடுஞ்சாலைத் துறையால் பராமரிக்கப்படும் சாலைகளில் ஏற்படும்பள்ளங்கள் குறித்து மக்கள்ஜிபிஎஸ் மற்றும் புகைப்படங்களுடன் புகார்களை பதிவேற்றம் செய்யலாம். பதிவேற்றம் செய்யப்பட்ட விவரம் அச்சாலைக்குரிய பொறியாளருக்கு செயலி வாயிலாக தெரிவிக்கப்பட்டு, குறித்த காலக்கெடுவுக்குள் பள்ளங்களை செப்பனிட நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், பேரிடர் காலங்களில் மரம் விழுதல், வெள்ளப்பெருக்கு போன்றவை குறித்தும் புகார்கள் அளிக்க ஏதுவாக செயலி உருவாக்கப்பட்டுள்ளது என நெடுஞ்சாலைத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

## இந்தோ - ஜெர்மனி இளம் தலைவர்கள் மாநாடு: பெங்களூருவில் இன்று தொடக்கம்




படம்: ஃபேஸ்புக்

**புதுடெல்லி:** கடந்த 2017-ம் ஆண்டு பிரதமர் மோடி, அப்போதைய ஜெர்மனி பிரதமர் ஏஞ்செலா மெர்க்கெல் ஆகியோரால் இந்தோ-ஜெர்மனி இளம் தலைவர்கள் கூட்டமைப்பு அறிமுகம் செய்யப்பட்டது. இந்தியா மற்றும் ஜெர்மனி நாடுகளுக்கிடையே பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துவதும், புவிசார் அரசியல் தொடர்புகளை வலுப்படுத்துவதும் இதன் நோக்கம் ஆகும்.

இக்கூட்டமைப்பின் முக்கிய செயல்பாடாக ஜெர்மனி மற்றும் இந்திய இளம் தலைவர்களை கண்டறிந்து, வணிகம், அரசியல், அறிவியல், தொழில்நுட்ப முன் னேற்றம் மற்றும் கலாச்சார செயல் பாடுகள் தொடர்பாக ஆண்டுக்கு ஒருமுறை இளம் தலைவர்கள் மாநாடு நடத்தப்படுகிறது.

ஒரு வருடம் ஜெர்மனியிலும் அடுத்த வருடம் இந்தியாவிலும் என இம்மாநாடு நடத்தப்பட்டு வருகிறது. இதில் பங்குபெற தலைமைப் பண்புடன் சிறப்பாக செயல்பட்டு வரும் 20 இந்திய இளம் தலைவர்கள் மற்றும் 20 ஜெர்மனிய இளம் தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு மாநாட்டுக்கு அழைக்கப்படுகின்றனர்.

இது குறித்து ‘இந்து தமிழ் திசை’ நாளிதழிடம் சேலம் ஓமலூரை சேர்ந்த ஜெர்மனிவாழ் இந்தியரும் மாநாட்டின் அழைப்பாளர்களில் ஒருவருமான பி.செல்வகுமார் கூறும்போது, ‘இடையில் கரோனா பெருந்தொற்றால் இம் மாநாடு நடத்தப்படவில்லை. கரோனாவுக்கு பிறகு இன்று பெங்களூருவில் நடைபெறும் முதல் மாநாடு இதுவாகும். இதில் பருவநிலை மாற்றம், எதிர்கால போக்குவரத்து, இந்தியாவில் தொழில் முனைவோருக்கான சூழல் மற்றும் ஜெர்மனியில் தகவல் தொழில்நுட்ப கட்டமைப் புக்கான இந்தியாவின் பங்கு மற்றும் வாய்ப்புகள் போன்ற தலைப்புகளில் இந்தியா-ஜெர்மனி இளம் தலைவர்கள் கலந்துரையாட உள்ளனர்’ என்றார்.

ஜி20 அமைப்புக்கு சிறப்பாக தலைமையேற்று பின்னர், பெங்களூரு மாநகரத்தில் வரும் 5-ம் தேதி வரை இம்மாநாடு சிறப்பான முறையில் நடைபெறவுள்ளது. மாநாட்டில் சிறப்பு பேச்சாளர்களாக செபி நிர்வாக ஆலோசனை குழுவின் தலைவரான மோனிகா ஹெலன், ஸ்சுலிக் மேலாண்மை மற்றும் வணிகக் கல்லூரியின் பேராசிரியர் ரகுநாதன், பாரத்பென்ஸ் நிறுவனத்தின் துணைத்தலைவர் டாக்டர் அன்சுமன் அவஸ்தி உள்ளிட்ட பல்வேறு பெருநிறுவனங்களின் முதன்மை அதிகாரிகள் சிறப்பு சொற்பொழி வாற்ற உள்ளனர்.

EVA STALIN IAS ACAD